முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 229/2018

வா.சா.1 – தங்கம்மாள்

07–06–2024 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) முன்பு நடந்த குறுக்கு விசாரணையில் என் வயது 63 என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். ஏற்கனவே என் பிறந்த தேதி 10.6.1953 என்று சொல்லி இருந்தேன் என்றால் சரிதான். அது தவறாக சொல்லி உள்ளேன். என் பிறந்த தேதி என்ன என்றால் 1948 ம் வருடம் பிறந்தேன். பிறந்த தேதி 48. தற்போது எனக்கு என்ன வயது என்றால் 76 ஆகும். இதற்கு முன்பு நடந்த குறுக்கு விசாரணையில் சரியான வயது தெரிவித்து தற்போது வழக்கிற்கு பாதகம் ஏற்படுவதால் பிறந்த வருடம் 1948 என்றும் வயது 76 என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் பிறந்த தேதி, மாதம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. 1948 ம் ஆண்டு தான் நான் பிறந்தேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கூடுதல் பிறந்த வாக்குமூலத்தில் 10.6.1953 ம் தேதி ஆதார் அட்டையில்தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என வழக்கிற்காக மாற்றி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2) ஆதார் அட்டையில் தவறாக உள்ள பிறந்த தேதியை இன்று வரை திருத்தம் செய்யவில்லை என்றால் என்னால் பஸ் ஏறி செல்ல முடியிவ்லலை. இதற்கு முன்பு சாட்சியமளிக்க தேனி மாவட்டம் கம்பத்தில் இருந்து வந்தேன் என்றால் சரிதான். தற்போது வழக்கிற்காக பஸ் ஏறி சென்று ஆதார் அட்டையிலுள்ள தேதியை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்க முடியவில்லை என பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) முதலில் நடந்த குறுக்கு விசாரணையில் கம்பம் மெட்டில் என் திருமணம் நடந்ததாக சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரிதான். என் திருமணம் கம்பத்தில் என் கணவர் வீட்டில் நடந்தது. கம்பம்மெட்டு என்பது கேரளா மாநிலத்தில் உள்ளது என்றால் சரிதான். கம்பம் தமிழ்நாட்டில் உள்ளது என்றால் சரிதான். தற்போது கூடுதல் வாக்குமூலத்தில் மூலம் 15.4.1963 ல் கம்பம் அருகிருள்ள கூளத்தேவர் முக்குத் தெருவில் திருமணம் நடந்ததாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அங்கு திருமணம் நடந்ததற்கான ஆவணம் எதுவும்

தாக்கல் செய்யவில்லை என்றால் அந்தக் காலத்தில் ஆதாரம் எதுவும் கிடையாது. வாசலில் பந்தல் போட்டுடீ திருமணம் நடத்துவார்கள். வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4) முன்பு நடந்த குறுக்கு விசாரணையில் என் திருமணம் 70 வருடங்களுக்கு முன்பு நடந்ததாக சொல்லி உள்ளேன் என்றால் தெரியவில்லை. ஞாபகமில்லை. எனக்கு திருமணம் நடைபெற்ற தேதி, மாதம் நினைவில்லை என்று குறுக்கு விசாராணையில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். குறுக்கு விசாரணை செய்யும் சமயத்தில் எனக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் ஞாபகமில்லாமல் தெரிவித்து விட்டேன். உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சியம் அளிப்பதால் முரண்பட்டு சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) எனது மூத்த மகளுக்கும், இளை மகளுக்கும் இடையே எத்தனை வயது இடைவெளி என்றால் 2 வருட இடைவெளியில் பிறந்தார். என் மகள்களின் பிறப்புச் சான்றிதழ் உள்ளதாக சாட்சியமளித்துள்ளேன், இன்று வரை அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் மருத்துவமனைக்கு சென்று பிறப்புச் சான்றிதழை என்னால் வாங்க முடியவில்லை. அரசு மருத்துவமனையில் என் மகள்கள் பிறந்திருந்தால் இலவசமாக பிறப்புச் சான்றிதழ் கொடுத்திருப்பார்கள், பிறப்புச் சான்றிதழ் பெற முடியவில்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்ச ரியல்ல. கூடுதல் வாக்குமூல சங்கதிகள் அனைத்தும் பொய்யானது, ஏற்றுக் கொள்ள வேண்டியவை அல்ல என்றால்சரியல்ல. வா.சா.4 என் மகள்தனலட்சுமியின் கணவர் ராஜேந்திரனின் அண்ணன் பாண்டியின் மனைவி உமாவின் சகோதரர் என்றால் சரிதான்.

3,4 பிரதிவாதிகள் இதே குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்கள்.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2024.06.07 04:24:25 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருப்பூர்.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 229/2018

வா.சா.4 – ராவணபாரதி

07-06-2024 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) என் அக்காவின் கணவர் பாண்டி, அவருடைய தம்பி ராஜேந்திரன் என்றால் சரிதான். ராஜேந்திரன் மனைவி தனலட்சுமி என்றால் சரிதான். தனலட்சுமி இந்த வழக்கின் 3ம் வாதி என்றால் சரிதான். 1ம் வாதிக்கு திருமணம் நடந்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் பிறப்பதற்கு முன்பே திருமணம் நடந்திருந்தது. திருமணத்தை பார்க்கவில்லை. விவரங்கள் தெரியும். கம்பம் என்ற ஊர் தமிழ்நாட்டில் உள்ளது என்றால் சரிதான், அங்கு கூளத்தேவர்மூக்குத் தெரு உள்ளது என்றால் சரிதான். கம்பம் மெட்டு கேரளா என்றால் சரிதான். தமிழ்நாட்டின் எல்லையில் உள்ளது.

2) 1ம் வாதி அவருடைய திருமணத்தை பொறுத்து ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. இறந்துபோன ராகவன் கூளத்தேவர் தெருவில் வசித்து வந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளாரா என்றால் தெரியாது. ஆனால் அங்கு இருந்தார். அந்த தேதியில் அந்த இடத்தில் 1ம் வாதிக்கும் ராகவனுக்கும் திருமணம் நடக்கவில்லை. வாதிகளுக்கு நான் உறவினர் என்பதால் அவர்கள் சொன்னபடி பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3 மற்றும் 4 பிரதிவாதிகள் இதே குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்கள்.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2024.06.07 04:24:34 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருப்பூர்.